JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **2/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | **Bhuvaneswari** | Caste | |
| Husband’s Name | **Manivannan** | Calling | |
| Village | **Sakthi nagar, Vijayamangalam** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 16.07.2025.**

<u>முதல் விசாரணை</u>

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். 17.11.2008 ம் தேதியன்று அ.சா.1 மற்றும் அ.சா.2 எங்கள் தெருவிற்கு பின்புறமாக குடியிருக்கும் நபர்களின் வீட்டில் நபர்கள் வந்த போது நான் பார்க்கவில்லை ஆனால் அவர்கள் சென்ற போது நான் பார்த்தேன். அதில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு சரிவர தெரியவில்லை அவர்கள் வந்து சென்ற நேரம்12.30 – 1.30 மணி இருக்கும். சம்பவம் நடந்த அன்று பொருட்கள் காணாமல் போனது பற்றி எனக்கு தகவல் தெரிந்ததா அ.சா.1 மற் றும் அ.சா.2 அவர்களிடம் ஆட்கள் வந்ததை பற்றி மட்டும் கூறினேன். எனக்கு கை குழந்தை இருந்ததால் அவர்கள் வீட்டுக்கு சென்று நான் எதுவும் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்று தற்போது நினைவில் இல்லை

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பத்தாம் வகுப்பு பாஸ் ஆன தேதி தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தேதி எப்படி சரியாக சொன்னீர்கள் என்றால் நினைவில் இருந்தது. சம்பவ தேதி நினைவில் இருந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய வீடு எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு திசை. என்னுடைய வீட்டில் இருந்து சம்பவம் இடத்துக்கு எவ்வளவு தொலைவு என்றால் அடி கணக்கு எனக்கு தெரியாது. என்னுடைய வீட்டிற்கும் சம்பவம் நடந்த வீட்டிற்கும் இடையில் வீடு உள்ளதா என்றால் இல்லை காலி இடம் மட்டும் உள்ளது.

2. எத்தனை நபர்கள் வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த நபர்களின் அங்க அடையாளங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அவர்களை பார்த்துவிட்டு நான்கு, ஐந்து வீடு தள்ளி உள்ள அ.சா.2 ன் அம்மாவான பானுமதி வீட்டுக்கு சென்று சொன்னேன். நான் பானுமதி வீட்டுக்கு வந்து சொல்வதற்கு முன்பாக அ.சா.1 வீட்டுக்கு சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் நபர்களை பார்த்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 பானுமதி ஆகியோர்கள் நன்கு அறிந்தவர்கள் என்றால் சரிதான்.

3. சம்பவ தினத்தன்று போலீசார் என்னை விசாரிக்கவில்லைஇ என்னை காவல் நிலையத்திற்க அழைத்து விசாரணை செய்யவில்லை. சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான்.சம்பவத்தன்று நபர்களை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியில்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 அருகில் குடியிருக்கும் நபர்கள் என்பதாலும் நண்பர்கள் என்பதாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை